

சட்டமேதை அண்ணல் அம்பேத்கர் அவர்களின் பிறந்தநாளில் மன்னார்குடி நகரில் அமைந்துள்ள திருவுருவச் சிலைக்கு சிபிஎம் மத்திய கட்டுப்பாட்டு குழுத் தலைவர் ஜி.ராமகிருஷ்ணன் அவர்கள், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் வெற்றி வேட்பாளர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா அவர்கள் மற்றும் கூட்டணி இயக்க தோழர்கள் மாலை அணிவித்து மரியாதை செய்து பிரச்சாரத்தை மேற்கொண்டனர். தலைமை செயற்குழு உறுப்பினர் தலையாயமங்கலாம் ஜி. பாலு , நகர செயலாளர் வீரா கணேசன் நகர்மன்ற தலைவர் மன்னை த. சோழராஜன் மற்றும் நிர்வாகிகள் உடன் இருந்தனர்.



குன்னம் சட்டமன்ற தொகுதி, செந்துறை ஒன்றியம், வாளரக்குறிச்சி,இரும்புலிகுறிச்சி, குழுமியம்,பரணம்,பாளையகுடி ஆகிய கிராமங்களில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் பொதுமக்களைச் சந்தித்து உதயசூரியன் சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரித்தார். ஏழை எளிய மக்களின் நல்வாழ்விற்காகத் தொடர்ந்து உழைத்திட, உதயசூரியன் சின்னத்தில் மக்கள் அளிக்கும் வாக்குகள் மாபெரும் சரித்திரம் படைக்கும் என்றார்.




விருகம்பாக்கம் சட்டமன்ற தொகுதி தி.மு.க. வேட்பாளர் பிரபாகர ராஜாவை ஆதரித்து வடபழனி அருணாச்சலா வீதியில் கழக கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவையின் தலைவர் வாகை சந்திரசேகர் வாக்கு சேகரித்தார். உடன் தி.மு.க. மற்றும் கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.



கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க “Delimitation” என்ற பெயரில் சட்டத் திருத்தம் கொண்டு வந்து, நாடாளுமன்றத்தில் தமிழ்நாட்டின் குரலை நசிக்கிடும் வகையில் ஒன்றிய பா.ஜ.க. அரசு கொண்டு வரவுள்ள கருப்புச் சட்டத்திற்கு எதிராக கருப்புக் கொடி திருவிடைமருதூர் சட்டமன்ற தொகுதி வெற்றி வேட்பாளர் முனைவர் கோவி. செழியன் ஏற்றினார். இந்நிகழ்வில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம், ஒன்றிய கழக செயலாளர்கள் கோ.க.அண்ணாதுரை, மிசா.என். மனோகரன், உதயா. ரவிச்சந்திரன் மற்றும் கூட்டணி கட்சித் தலைவர்கள் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# பெரம்பலூர் தொகுதியில் வேட்பாளர் ஜெயலெட்சுமியை ஆதரித்து

# கழக துணைப்பொதுச்செயலாளர் ஆ.இராசா தீவிரப் பிரச்சாரம்!

## மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்பு!

பெரம்பலூர், ஏப்.18-

கழக துணைப் பொதுச்செயலாளர் மேனாள் ஒன்றிய அமைச்சர் ஆ.இராசா.எம்.பி., பெரம்பலூர் தொகுதியில் போட்டியிடும் வேட்பாளர் S T.ஜெயலெட்சுமியை ஆதரித்து லாடபுரம்,குரும்பலூர், செட்டிக்குளம்,பாடாலூர்,வி.களத்தூர் உள்ளிட்ட இடங்களில் தீவிர பிரச்சாரம் செய்தார்.

அப்போது ஆ.இராசா.எம்.பி., பேசுகையில், 2021ல்

தமிழக முதல்வராக முத்துவேல் கருணாநிதி ஸ்டா லின் பதவியேற்றவுடன்

கொரோனா பொது முடக்கம் சமயத்தில் ரூ.4000 வழங்கி மக்களை காப்பாற்றினார், மாணவர்கள் 12 இலட்சம் பேருக்கு இலவச லேப்டாப் வழங்கியுள்ளார்,

உத்தரப்பிரதேசம், குஜராத் போன்ற மாநிலங்களுக்கு

ஜி.எஸ்.டி. தொகையை வாரி வழங்கும் ஒன்றிய அரசு தமிழகத்தை வஞ்சிக்கிறது.

இந்தியை திணித்து தமிழகத்தை ஒழிக்க பார்க்கிறது பா.ஜ.க.

அம்பேத்கர், பெரியார்

அண்ணா, கலைஞர் போன்ற தலைவர்கள் உருவாக்கிய கட்டமைப்பை தமிழ்நாட்டில் அவர்களால் உடைக்க முடியவில்லை, எடப்பாடி எனும் ரூட்டில் தமிழகத்தில் பா.ஜ.க. நுழையப்பார்க்கிறது எனவும் ஆ.இராசா.எம்.பி. பேசினார்.

மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், தலைமை செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என்.ராஜேந்திரன்,

தொகுதி பார்வையாளர் தங்க.சித்தார்த்தன், பெதுக்குழு உறுப்பினர் ஆர்.முருகேசன்,

மாவட்ட துணைச் செயலாளர் தழுதாழை பாஸ்கர்,

நூருல்ஹிதாஇஸ்மாயில், சன்.சம்பத், மாவட்ட பொருளாளர் செ.ரவிச்சந்திரன், பெரம்பலூர் ஒன்றிய கழக செயலாளர் எம்.இராஜ்குமார், வேப்பந்தட்டை மேற்கு ஒன்றிய கழக செயலாளர் செ.நல்லதம்பி, ஆலத்தூர் மேற்கு ஒன்றிய கழக பொறுப்பாளர் டாக்டர் செ.வல்லபன்,வேப்பந்தட்டை கிழக்கு ஒன்றிய கழக பொறுப்பாளர் ந.ஜெகதீஷ்வரன்,

தே.மு.தி.க.மாவட்ட செயலாளர் சிவாதுரைஐயப்பன்,மனிதநேய மக்கள் கட்சி மாவட்ட தலைவர் குதரத்துல்லா, தலைமை கழக பேச்சாளர் எசனை ஆறுமுகம், இளம் பேச்சாளர் காருண்யா நடராஜன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் து.ஆதவன், துணை அமைப்பாளர்கள் அ.அப்துல்கரீம், ஆர்.அருண், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் தங்க.கமல் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## சட்டப்பேரவை பொதுத்தேர்தல் - 2026

# தொகுதிப் பார்வையாளர்கள் நியமனம்!

### (11வது பட்டியல்)

### தலைமைக் கழகம் அறிவிப்பு!

நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தல் பணிகளை ஒருங்கிணைக்கும் வகையில் முதற்கட்டமாக கீழ்க்கண்டவாறு சட்டமன்றத் தொகுதிகளின்பார்வையாளர்கள் தலைமைக் கழகத்தால் நியமிக்கப்படுகிறார்கள்.

கழக நிர்வாகிகள் மற்றும் தோழர்கள் முழு ஒத்துழைப்பு வழங்கிட வேண்டுமென கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

| சட்டமன்றத் தொகுதி | - பார்வையாளர் |
|---|---|
| விராலிமலை | – பி.டி.அரசகுமார்<br>ஆர்.ராஜசேகர் |
| சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி | – பி.கே.பாபு |
| அரக்கோணம் | – பொள்ளாச்சி மா.உமாபதி |

**குறிப்பு :** ஏற்கனவே தொகுதி பார்வையாளர்களாக நியமிக்கப்பட்டவர்களுடன் இவர்கள் இணைந்து பணியாற்றுவார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600 018
நாள்- 14.04.2026

**தலைமைக் கழகம்**
தி.மு.க.



தாராபுரம் சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளர் டாக்டர். டி.இந்திராணிக்கு ஆதரவாக கன்னிவாடி பேரூராட்சி மற்றும் அதன் சுற்றியுள்ள பகுதிகளில் மண்டலப் பொறுப்பாளர், அமைச்சர் அர.சக்கரபாணி உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். இதில் திருப்பூர் கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் இல.பத்மநாபன், ஒன்றிய கழக செயலாளர் ப.பழனிச்சாமி, பேரூர் கழக செயலாளர்கள் மக்கள் க.தண்டபாணி, கன்னிவாடி சுரேஷ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



பர்கூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட போச்சம்பள்ளி வடக்கு தெற்கு ஒன்றியத்தில் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளர் மதியழகன் எம்.எல்.ஏ. தீவிர வாக்கு சேகரிப்பின் போது பெண்கள் ஆரத்தி எடுத்து வரவேற்றனர் . திராவிட மாடல் நாயகர் இந்தியாவின் முதல்வருக்கெல்லாம் முதல்வர் அவர்களின் ஐந்து ஆண்டுகால பொற்கால ஆட்சியை பற்றி மக்களிடம் எடுத்துரைத்து வருகிற சட்டசபை தேர்தலில் உதயசூரியன் சின்னத்தில் வாக்குகளை சேகரித்தார் கூட்டத்தின் போது அவை தலைவர் நாகராஜ், ஒன்றிய செயலாளர்கள் சாந்தமூர்த்தி இளையராஜா உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கூட்டணி கட்சியினர் ஏராளமானோர் உடன் இருந்தனர்



திருப்பூர் பெரிச்சிபாளையத்தில் திருப்பூர் தெற்கு சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளர், வடக்கு மாவட்டக் கழக பொறுப்பாளர் ந.தினேஷ்குமார், திருப்பூர் தெற்கு மாநகர கழக செயலாளர் டிகேடி மு.நாகராசன் ஆகியோர் மசோதா நகலை எரித்து கண்டன போராட்டத்தில் ஈடுபட்டனர். இதில் பகுதி கழக பொறுப்பாளர்கள் தம்பி ப.குமாரசாமி, மு.நந்தகோபால் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



ஈரோடு வடக்கு மாவட்ட கழக செயலாளரும், கோபிசெட்டிபாளையம் சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற கூட்டணி கட்சிகளின் கழக வேட்பாளருமான என்.நல்லசிவம் தலைமையில் திண்டுக்கல் ஐ.லியோனி ஒன்றிய அரசின் தொகுதி மறுவரையறை மசோதாவை கண்டித்து, சட்ட நகலை எரித்தார். ஒன்றிய அரசைக் கண்டித்து கைகளில் கருப்புக் கொடி , பதாகைகளை ஏந்தி கோஷங்கள் எழுப்பி மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் கோபி சட்டமன்ற தொகுதி தேர்தல் பொறுப்பாளர் வி.சி.சந்திரகுமார், கோபி நகர கழக செயலாளர் என்.ஆர்.நாகராஜ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.